வாரம் - 15 ஊக்கப் பாடல் எண் - 15

# திருக்குறள்

விசும்பின் துளிவீழின் அல்லால்மற் றாங்கே
பசும்புல் தலைகாண்ப தரிது.

நெடுங்கடலும் தன்நீர்மை குன்றும் தடிந்தெழிலி
தான்நல் காதாகி விடின்.

சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
வறக்குமேல் வானோர்க்கும் ஈண்டு.

தானம் தவம் இரண்டும் தங்கா வியன் உலகம்
வானம் வழங்கா தெனின்.

நீர்இன்று அமையாது உலகெனின் யார்யார்க்கும்
வான்இன்று அமையாது ஒழுக்கு.

- திருவள்ளுவர்

திருக்குறள் பாடி முடித்த பிறகு மாணவர்கள் விரும்புகிற இசையோடு பாடுகிற, உடல் அசைவுடன் பாடுகிற 6 / 8 வரிகள் உடைய பாடல்களை தேர்வு செய்து பாடவைத்து ஊக்குவிக்கவும்.

பிறகு மாணவர்களிடம் அன்பாகப்பேசி கடந்த ஏழு நாள்களில் என்ன செய்தீர்கள் என்று இயல்பாகப் பேசவைத்து அவர்களை உங்களோடு இணைக்கவும்.

பிறகு சென்ற வாரம் எழுதிய வீட்டுப் பாடங்களை கேட்டு வாங்கித் தொகுப்பில் வைக்கவும்.

# வினாச் சொற்கள் அறிமுகம்

| | | |
|---|---|---|
| WHAT | = | என்ன |
| WHY | = | ஏன் |
| WHERE | = | எங்கு |
| WHEN | = | எப்பொழுது |
| WHICH | = | எது |
| HOW | = | எப்படி |

மேலுள்ள சொற்களை மாணவர்கள் உணரச்செய்யவும்

வினாச் சொற்களைச் சிறிய தொடர்களை இணைத்துக் காட்டி உள்வாங்கச் செய்யவும்

உன் வீடு எது ? உன் பை எது ? எது ஆடும் ?

# வினாப்பயிற்சியும் விடையளித்தலும்

## உன் வீடு எது ?

**இது என் வீடு.**

**அது உன் வீடு.**

எண் 15 எழுதியுள்ளது என் வீடு. எண் 10 எழுதியுள்ளது உன் வீடு.

## என் பை எது ?

**பச்சை நிறமுடையது உன் பை.**

## எது பறக்கும் ?

**காகம் பறக்கும் . காகம் வானில் பறக்கும் .**

## எந்த உணவு உனக்குப் பிடிக்கும் ?

**இனிப்பு உணவு எனக்குப் பிடிக்கும் .**

வேறு வினாக்களை மாணவர்கள் கேட்கவும், மாணவர்களே அதற்கான பதில் சொல்லவும், பயிற்றுவிக்கவும்.

**எப்பொழுது** என்ற வினாச் சொல்லை வீட்டிலும் வகுப்பறையிலும் பயன்படுத்த ஊக்குவிக்கவும்




அழகாக எழுதவும் ஒலிக்கவும் பயிற்சி தரவும்.
எழுத்துகளை எங்கு தொடங்கி எங்கு முடிக்க வேண்டும்
என்பதற்கும் பயிற்சி தரவும். எழுத்துகள் அழகாக இல்லை
என்றால் நேர்கோடு வளைகோட்டுப் படங்களை
எழுதுவதற்கு முன்பாகப் பயிற்சி தரவும்.

**வாரம் - 15** **மாணவர் செயற்பாடு எண் - 1**

**மாணவர் பெயர் ....................................... நிலை........... நாள்...............**

( கற்றுக்கொண்ட ள் ள எழுத்துகளை கீழே எழுதிப் பழகவும் )

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ள் | ள | ள் | ள | ள் | ள |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |

# வாரம் - 15

## மாணவர் செயற்பாடு எண் - 2

மாணவர் பெயர் ................................... நிலை........... நாள்...............

( கற்றுக்கொண்ட ள் ள எழுத்துகளை கீழே வட்டமிடவும் )

ளா ளே ளெ ளை - எழுத்துகளில் உள்ள ள எழுத்தை வட்டமிட்டாலும் சரியே

கோவையில்

# 95 பள்ளிவாசல்களில் பக்ரீத் தொழுகை

## 1-ந்தேதி நடக்கிறது

கோவை, டிச. 30-
கோவையில் வருகிற 1-ந்தேதி 95 பள்ளி வாசல் களில் பக்ரீத் தொழுகை நடைபெறு கிறது.

இதுகுறித்து கோவை ஐக்கிய ஜமாஅத் பேரவை பொதுச் செயலாளர் அப்துல்ஜப்பார், தலைவர் அமீர் அல்தாப் ஆகியோர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டிருப் பதாவது:-

தியாகத் திருநாளாம் ஹஜ்ஜுப் பெருநாள் வருகிற 1-ந்தேதி (திங்கட் கிழமை) நாடெங்கும் கொண்டாடப்பபடுகிறது. கோவையிலும் அதன் சுற்றுப்புறங்களிலுமுள்ள 95 பள்ளிவாசல்களில் அன்று காலை 7.30 மணி முதல் 9 மணி வரை தியாகப் பெருநாள் சிறப்புத் தொழுகை நடைபெறும்.

தொழுகை முடிந்தபின் முஸ்லிம்கள் 'குர்பான்' கொடுத்து சகோதர சமுதாயத் தினருடன் விருந்தோம்பல் மற்றும் இணிப்புகள் வழங்கி அந்த நாளைக் கொண் டாடுவார்கள்.

### ஒற்றுமையை பேணி காக்க

மனிதன் தான் ஏற் றுக் கொண்ட சத்திய லட்சியத்திற்காக தொல்லை களை, சோதனைகளை எல்லாம் புன்முறுவலுடன் சகித்துக் கொள்ள வேண்டும். அதற்காக எவ்வித தியாகங் களை செய்யவும் தயங்கக் கூடாது. சத்தியத்திற்காக சர்வமும் அர்ப்பணித்து விடுவோம் எனும் கொள்கையால் யார் யார் வாழ்கிறார்களோ அவர்களே உலகில் வெற்றி பெற முடியும் என்பதை இந்த தியாகத்திருநாள் நினை வுறுத்துகிறது.

கோவை மாநகரின் நிலையான அமைதிக்கும், சர்வ சமய ஒற்றுமையை பேணி காக்கவும் இந்தியாவின் தலைசிறந்த தொழில் நகராக கோவையை மாற்றவும் இந்தநன்னாளில் சூளுரைப் போம்.

மேற்கண்டவாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள் ளது.

அகில இந்திய

# உள்ளாட்சி கூட்டமைப்பு துணை தலைவர் தேர்வு

தொண்டாமுத்தூர்,டிச.30-
அகில இந்திய உள்ளாட்சி பிரதிநிதிகளின் கூட்டமைப்பு கூட்டம் டெல்லியில் நடந்தது. அப்போது கோவை மாவட்டம் தொண்டாமுத்தூர் ஒன்றிய வெள்ளிமலைப்பட்டணம் ஊராட்சிமன்ற தலைவர் சுகன்யா ராஜரத்தினம் அகில இந்திய உள்ளாட்சி பிரதி நிதிகளின் கூட்டமைப்பு துணைத் தலைவராக தேர்ந் தெடுக்கப்பட்டார்.

அவருக்கு உள்ளாட்சி பிரதி நிதிகளின் கூட்டமைப்பினர் பொன்னாடை போர்த்தி வாழ்த்து தெரிவித்தனர்.


**வாகனம் விற்பனைக்கு**

வாகனம் AL 2214
மாடல்- 2003
வண்டி எண்- KA 19A 9949
வாகனம் AL 2214
மாடல்- 2003
வண்டி எண்- KA 19A 9951
-தொடர்புக்கு-

**ஸ்ரீராம் டிரான்ஸ்போர்ட் பைனான்ஸ் கம்பெனி லிட்,**
II Floor ஆர்ட்சன் டவர், இராமநாதபுரம் சிக்னல் அருகில், 1770, திருச்சி ரோடு, கோவை-45. Ph: 2582171, 72

**காலி இடம் விற்பனைக்கு**

விளாங்குறிச்சி- காளப்பட்டி மெயின்ரோட்டில் 66 அடி அகலம், 132 அடி நீளம் இருபுறம் ரோடு வசதியுள்ள விவசாய பூமி காலி இடம் 20 சென்ட் விற்பனைக்குள்ளது.

**உரிமையாளர்**
**V.N.S.**
**94433-44875**


# மோப்பிரிபாளையம் பேரூராட்சி

ந.க.எண்: 70/2006 நாள்: 29.12.06

# ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

மோப்பிரிபாளையம் பேரூராட்சி 2006-07ம் ஆண்டு 12-வது நிதிக்குழு திட்டத்தில் செய்யப்படும் வேலைகளுக்கு மூடி முத்திரையிடப்பட்ட இனவாரி ஒப்பந்தப்புள்ளிகள் 5.1.2007ம் தேதி பிற்பகல் 3.00 மணி வரை பதிவு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர்களிடமிருந்து வரவேற்கப்படுகிறது. ஒப்பந்தப்புள்ளி கொடுப்பவர்கள் சம்பந்தப்பட்ட பணிக்குரிய டேவணித் தொகையை 5.1.2007ம் தேதி பிற்பகல் 3.00 மணிக்குள் செலுத்தப்பட வேண்டும். செலுத்தப்பட்ட இரசீதை சம்பந்தப்பட்ட ஒப்பந்தப்புள்ளியுடன் அசல் இரசீது இணைக்கப்பட வேண்டும். வரப்பெற்ற இனவாரி ஒப்பந்தப்புள்ளிகள் 5.1.2007ம் தேதி 3.30 மணிக்கு வருகை புரிந்துள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறந்து பரிசீலிக்கப்படும். முன்னறிவிப்பின்றியோ, எந்தவித காரணமின்றியோ ஒப்பந்தப்புள்ளியை நிறுத்தி வைக்கவோ அல்லது தள்ளுபடி செய்யவோ செயல் அலுவலர் அவர்களுக்கு முழு அதிகாரம் உண்டு. இதர விபரங்களுக்கு அலுவலக வேலை நாட்களில் அலுவலக நேரத்தில் நேரடியாக கேட்டுத் தெரிந்து கொள்ளலாம். இனவாரி ஒப்பந்தப்புள்ளி படிவங்களை அலுவலத்தில் அதற்குண்டான தொகையை 4.1.2007ம் தேதி 5.00 மணிக்குள் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

| வ எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு (இலட்சத்தில்) | டெபாசிட் | டெண்டர் முறை |
|---|---|---|---|---|
| 1. | வாகராயம்பாளையத்தில் க.ச.எண். 111/1 காலையில் உள்ள புறம்போக்கு நிலத்தில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்திற்கு கம்பிவேலி அமைத்து பாதுகாப்பு செய்தல் | 3.00 | 6000/- | ஷெட்யூல்டு |
| 2. | கணபதிபாளையம் க்ணேசர் வீதி போயர் காலனியில் வடிகால் கட்டுதல். | 1.00 | 2000/- | ” ” |
| 3. | கரிச்சிபாளையம் கோவில் வீதி, வாகராயம்பாளையம் ராமர் கோவில் வீதியில் தார் சாலை அமைத்தல். | 1.30 | 2600/- | ” ” |

**(ஒம்) தலைவர்**
மோப்பிரிபாளையம் பேரூராட்சி,
வாகராயம்பாளையம்-641 659.

**(ஒம்) செயல் அலுவலர்**
மோப்பிரிபாளையம் பேரூராட்சி,
வாகராயம்பாளையம்-641 659.

செ.ம.தொ.அ.வெளியீட்டு எண்:742/ஒப்பந்தப்புள்ளி/2006

# வாரம் - 15

## மாணவர் செயற்பாடு எண் - 3

மாணவர் பெயர் ...................................... நிலை........... நாள்...............

( மாணவர்களே வகுப்பறையில் எழுத்தை இணைத்துப் படிக்க ஊக்குவிக்கவும். இதனை வீட்டிற்குக் கொடுத்து, பயிற்சி செய்து , அடுத்த வாரம் வரும் பொழுது **இயல்பாகப் படிக்க** ஊக்குவிக்கவும். மாணவர்கள் இதனை மனப்பாடம் செய்து ஒப்புவிக்கக் கூடாது. )

### நினைவூட்டல் -

**சக் பத் பத நக பந் நட நத நத் சந**

**கந வச வட வத மத தட தவ பத**

**ய்ய கய கய் நர கர வர சர டர்**

**ல்ல லல் கன நல வல லட் னர்**

**ண்ண வன மண சன் பன பன்**


14

களம் வளம்

தளம் தள்ள

பள்ளம் மத்தளம்

கள்வர்

மாணவர் பெயர் ........................................ நிலை........... நாள்...............

# ர ர், ல ல், ன் ன, ண் ண, ள் ள

(பத்து எழுத்துகளையும் ஒலித்துக் கொண்டே கீழே வட்டமிடவும்)

கோவையில்

## 95 பள்ளிவாசல்களில் பக்ரீத் தொழுகை

### 1-ந்தேதி நடக்கிறது

கோவை, டிச. 30– கோவையில் வருகிற 1–ந்தேதி 95 பள்ளி வாசல் களில் பக்ரீத் தொழுகை நடைபெறு கிறது.

இதுகுறித்து கோவை ஐக்கிய ஜமாஅத் பேரவை பொதுச் செயலாளர் அப்துல்ஜப்பார், தலைவர் அமீர் அல்தாப் ஆகியோர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டிருப் பதாவது:–

தியாகத் திருநாளாம் ஹஜ்ஜுப் பெருநாள் வருகிற 1–ந்தேதி (திங்கட் கிழமை) நாடெங்கும் கொண்டாடப்பபடுகிறது. கோவையிலும் அதன் சுற்றுப்புறங்களிலுமுள்ள 95 பள்ளிவாசல்களில் அன்று காலை 7.30 மணி முதல் 9 மணி வரை தியாகப் பெருநாள் சிறப்புத்தொழுகை நடைபெறும்.

தொழுகை முடிந்தபின் முஸ்லிம்கள் 'குர்பான்' கொடுத்து சகோதர சமுதாயத் தினருடன் விருந்தோம்பல் மற்றும் இணிப்புகள் வழங்கி அந்த நாளைக் கொண் டாடுவார்கள்.

ஒற்றுமையை பேணி காக்க மனிதன் தான் ஏற்றுக் கொண்ட சத்திய லட்சியத்திற்காக தொல்லை களை, சோதனைகளை எல்லாம் புன்முறுவலுடன் சகித்துக் கொள்ள வேண்டும். அதற்காக எவ்வித தியாகங் களை செய்யவும் தயங்கக் கூடாது. சத்தியத்திற்காக சர்வமும் அர்ப்பணித்து விடுவோம் எனும் கொள்கையால் யார் யார் வாழ்கிறார்களோ அவர்களே உலகில் வெற்றி பெற முடியும் என்பதை இந்த தியாகத்திருநாள் நினை வுறுத்துகிறது.

கோவை மாநகரின் நிலையான அமைதிக்கும், சர்வ சமய ஒற்றுமையை பேணி காக்கவும் இந்தியாவின் தலைசிறந்த தொழில் நகராக கோவையை மாற்றவும் இந்நந்நன்னாளில் துஆரைப் போம்.

மேற்கண்டவாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள் ளது.

அகில இந்திய

## உள்ளாட்சி கூட்டமைப்பு துணை தலைவர் தேர்வு

தொண்டாமுத்தூர்,டிச.30– அகில இந்திய உள்ளாட்சி பிரதிநிதிகளின் கூட்டமைப்பு கூட்டம் டெல்லியில் நடந்தது. அப்போது கோவை மாவட்டம் தொண்டாமுத்தூர் ஒன்றிய வெள்ளிமலைப்பட்டணம் ஊராட்சிமன்ற தலைவர் சுகன்யா ராஜரத்தினம் அகில இந்திய உள்ளாட்சி பிரதி நிதிகளின் கூட்டமைப்பு துணைத் தலைவராக தேர்ந் தெடுக்கப்பட்டார்.

அவருக்கு உள்ளாட்சி பிரதி நிதிகளின் கூட்டமைப்பினர் பொன்னாடை போர்த்தி வாழ்த்து தெரிவித்தனர்.


**வாகனம் விற்பனைக்கு**

வாகனம் AL 2214
மாடல்– 2003
வண்டி எண்– KA 19A 9949
வாகனம் AL 2214
மாடல்– 2003
வண்டி எண்– KA 19A 9951
-தொடர்புக்கு-

**ஸ்ரீராம் டிரான்ஸ்போர்ட் பைனான்ஸ் கம்பெனி லிட்,**
II Floor ஆர்ட்சன் டவர், இராமநாதபுரம் சிக்னல் அருகில், 1770, திருச்சி ரோடு, கோவை–45. Ph: 2582171, 72

**காலி இடம் விற்பனைக்கு**

விளாங்குறிச்சி- காளப்பட்டி மெயின்ரோட்டில் 66 அடி அகலம், 132 அடி நீளம் இருபுறம் ரோடு வசதியுள்ள விவசாய பூமி காலி இடம் 20 சென்ட் விற்பனைக்குள்ளது.
**உரிமையாளர்**
**V.N.S.**
**94433-44875**


## மோப்பிரிபாளையம் பேரூராட்சி

ந.க.எண்: 70/2006 நாள்: 29.12.06

## ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

மோப்பிரிபாளையம் பேரூராட்சி 2006–07ம் ஆண்டு 12–வது நிதிக்குழு திட்டத்தில் செய்யப்படும் வேலைகளுக்கு மூடி முத்திரையிடப்பட்ட இனவாரி ஒப்பந்தப்புள்ளிகள் 5.1.2007ம் தேதி பிற்பகல் 3.00 மணி வரை பதிவு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர்களிடமிருந்து வரவேற்கப்படுகிறது. ஒப்பந்தப்புள்ளி கொடுப்பவர்கள் சம்பந்தப்பட்ட பணிக்குரிய டேவணித் தொகையை 5.1.2007ம் தேதி பிற்பகல் 3.00 மணிக்குள் செலுத்தப்பட வேண்டும். செலுத்தப்பட்ட இரசீதை சம்பந்தப்பட்ட ஒப்பந்தப்புள்ளியுடன் அசல் இரசீது இணைக்கப்பட வேண்டும். வரப்பெற்ற இனவாரி ஒப்பந்தப்புள்ளிகள் 5.1.2007ம் தேதி 3.30 மணிக்கு வருகை புரிந்துள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறந்து பரிசீலிக்கப்படும். முன்னறிவிப்பின்றியோ, எந்தவித காரணமின்றியோ ஒப்பந்தப்புள்ளியை நிறுத்தி வைக்கவோ அல்லது தள்ளுபடி செய்யவோ செயல் அலுவலர் அவர்களுக்கு முழு அதிகாரம் உண்டு. இதர விபரங்களுக்கு அலுவலக வேலை நாட்களில் அலுவலக நேரத்தில் நேரடியாக கேட்டுத் தெரிந்து கொள்ளலாம். இனவாரி ஒப்பந்தப்புள்ளி படிவங்களை அலுவலத்தில் அதற்குண்டான தொகையை 4.1.2007ம் தேதி 5.00 மணிக்குள் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

| வ எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு (இலட்சத்தில்) | டெபாசிட் | டெண்டர் முறை |
|---|---|---|---|---|
| 1. | வாகராயம்பாளையத்தில் க.ச.எண். 111/1 காலையில் உள்ள புறம்போக்கு நிலத்தில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்திற்கு கம்பிவேலி அமைத்து பாதுகாப்பு செய்தல் | 3.00 | 6000/– | ஷெட்யூல்டு |
| 2. | கணபதிபாளையம் கணேசர் வீதி போயர் காலனியில் வடிகால் கட்டுதல். | 1.00 | 2000/– | ” ” |
| 3. | கரிச்சிபாளையம் கோவில் வீதி, வாகராயம்பாளையம் ராமர் கோவில் வீதியில் தார் சாலை அமைத்தல். | 1.30 | 2600/– | ” ” |

**(ஒம்) தலைவர்**
மோப்பிரிபாளையம் பேரூராட்சி,
வாகராயம்பாளையம்–641 659.

**(ஒம்) செயல் அலுவலர்**
மோப்பிரிபாளையம் பேரூராட்சி,
வாகராயம்பாளையம்–641 659.

செ.ம.தொ.அ.வெளியீட்டு எண்:742/ஒப்பந்தப்புள்ளி/2006

**வாரம் - 15** **வீட்டு வேலை எண் - 2**

**மாணவர் பெயர் ....................................... நிலை........... நாள்...............**

(கற்றுக்கொண்ட எழுத்துகளைக் கீழே எழுதிக் கொண்டு வரவும் )

(எழுதும் பொழுது எழுத்துகளை ஒலித்துக் கொண்டே எழுதவும்)

| ன்<br>ன | ண்<br>ண | ள் | ள | ள் | ள |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |